

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2024) வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனையோட்டம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம். கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர். தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை துணைச்செயலாளர் மு.பிரதாப் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




### வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்டத் திட்டம்:

# விருதம்பட்டு சர்க்கார்தோப்பு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனை ஓட்டம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

**வேலூர், டிச.7-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2024) வேலூர் மாநகராட்சி பாதாள சாக்கடை இரண்டாம் கட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனையோட்டம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

அதன் விரபம் வருமாறு :

வேலூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பகுதி1 TNUDPIII 20082015 திட்டத்தின்கீழ் ரூ.40.49 கோடி மதிப்பீட்டில் 48.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைத்து 10.28MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இரண்டாம் கட்டமாக AMRUT 201617 திட்டத்தின்கீழ் ரூ.690.91 கோடி மதிப்பீட்டில் 4 சிப்பங்களாக பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு TNUIFSL நிறுவனத்தின் மூலமாக ஆசிய உலக வங்கி (ADB) நிதியுதவியுடன் 421 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் அமைக்கவும் 50.00 MLD(STP) கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 7.10.2019 அன்று பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

முதலமைச்சர் 3.02.2023 நடைபெற்ற ஆய்வின் போது இப்பணிகளை துரிதமாக முடிக்க அறிவுறுத்தியதன் அடிப்படையில் பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. தற்போது 401 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் விருதம்பட்டு சர்க்கார் தோப்பு பகுதியில் நிறுவப்பட்டு சோதனையோட்டம் நடைபெற்று வருகின்றது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2024) பாதாள சாக்கடை திட்டம் குறித்தும், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சோதனையோட்ட பணிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அலுவலர்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், வேலூர் மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் திருமதி வே.இரா.சுப்புலெட்சுமி, சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை துணைச் செயலாளர் மு.பிரதாப் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# அண்ணல் அம்பேத்கர் 68ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### திருவுருவச் சிலைக்கு – பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, டிச.7-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. அவரது திருவுருவச் சிலைக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் சட்டப்பேரவை துணைத் தலைவர்கு. பிச்சாண்டி, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் உட்பட கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

06.12.2024 வெள்ளிக்கிழமை காலை, திருவண்ணா மலை அண்ணா சாலை, மத்திய அஞ்சல் நிலையம் அருகில், திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 68ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகித்தார்.

செங்கம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட துணை செயலாளருமான மு.பெ.கிரி, மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ. வேலு அவர்கள், அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர் வசந்தம் கார்த்திகேயன், கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.செந்தில், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், ஏ.டபள்யூ.சர்தார், பாலமுரளி கிருஷ்ணா, எல்.ஐ.சி. து. வேலு, கற்பகம் சரவணன், பொதுக்குழு உறுப்பினர் நா.பழனி, மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் ஜீவரேகாவிஜயராஜ், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, அ.கண்ணன், ஹக்கிம் சேட் மற்றும் ஏந்தல் நாக.சங்கர், எம்.ஆர். கலைமணி, வேங்கிக்கால் பரத், துரை.வெங்கட், வழக்கறிஞர் எஸ்.கண்ணதாசன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கிரிக்கெட் க.ரவி, ஏ.கே.ரத்தினகுமார், அ. மோகன்ராஜ், க.ரகுவர்மன், எஸ்.சமயராஜ், இரா.மின்னல் கமல், எம்.வெங்கடேஷ், ஏ.எம்.பாஷா, விஜி தேவராஜ், டி.பென்ராபர்ட், இராயல் தியாகு, ஆர்.வெங்கடேஷ், தீபலட்சுமி, காமாட்சி பாண்டியன், நகரமன்ற உறுப்பினர்கள் அ. கோவிந்தன், அ.வடிவேல், உதயாரவி வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, மற்றும் மா.ஞானம், கண்ணகி, வினோத்குமார், குணாளன், சா.ரகுநாத் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், வி.ஐ.டி.பல்கலைக்கழக கூட்டரங்கில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கு அரசுத் துறைகளின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன், மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பரிமளா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் வேலாயுதம், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் எல்.இதயவர்மன், உதயா கருணாகரன், ஒன்றியச் செயலாளர் பையனூர் சேகர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க இரண்டு நாள் சுற்றுப்பயணமாக இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**07/12/2024 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | ‘தி இந்து’ குழுமம் மற்றும் நறுவீ மருத்துவமனை இணைந்து மேற்கொள்ளும் பொதுநல முன்னெடுப்புத் தொடக்க விழா. | நறுவீ மருத்துவமனை, வேலூர். |
| காலை 11:00 மணி | வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்குதல். | முத்தமிழறிஞர் கலைஞர் விளையாட்டு மைதானம், வி.ஐடி. கல்லூரி பின்புறம், வேலூர் |
| மதியம் 12:00 மணி | வேலூர் மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஏ.எஸ்.குருசாமி மஹால், சேவூர், வேலூர் |
| மதியம் 2:30 மணி | மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா | மேல்விஷாரம், இராணிப்பேட்டை. |
| மதியம் 03:00 மணி | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புதிய வகுப்பறைகள் திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |
| மதியம் 03:20 மணி | நகராட்சிப் பேருந்து நிலையம், பயணியர் நிழற்குடை, பள்ளி புதிய வகுப்பறைகள் திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |
| மதியம் 03:45 மணி | நகராட்சிப் பூங்கா திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 05-12-2024

